Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 67** செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது சங்.7:10 ஜுன் & ஜுலை 2021 No.6 & 7

## இயேசுவையே முடிவாக நோக்குதல்

### *Seeing Jesus as the end*

Roy & Revel Hession

யோவான் 14-ம் அதிகாரத்தில் இயேசு ஆச்சரியமான ஒரு காரியத்தை கூறினார். "நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்" யோவா.14:4. தோமா உடனே, 'நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை எப்படி அறிவோம் என்றான்' வச.5. இயேசு பதிலாக "உங்களுக்கு வழி தெரியும்" ஏனெனில் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்" வச.6.

இந்த வழி எங்கே நடத்துகிறது? பிதாவினிடத்திற்கு. ஏனெனில் 'என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' வச.6. அதற்கு இயேசு 'என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் என்றார்' வச.7.

இடைமறித்த பிலிப்பு, 'ஆண்டவரே பிதாவை எங்களுக்கு காண்பியும் என்றான்' வச.8. இதற்கு பதிலாகத்தான் இயேசு: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார்" வச.9. இவ்வாறு அவர்கள் வழியையும் வழியின் முடிவையும் அதாவது இயேசுவே வழியும் அதன் முடிவும் என்று கண்டு கொண்டனர். அவரைக் கண்டுகொள்ள மனிதர் வழியை மட்டுமல்ல அதன் முடிவையும் கண்டுகொள்ளலாம். அதற்கு அதிகமாக நமது தேவைகளுக்காக செல்ல வேண்டியதில்லை. நமது தேவைகளுக்கெல்லாம் முடிவு அவரே. எளிதில் நாம் செல்லக் கூடிய வழியும் அதன் முடிவும் அவரே.

இயேசுவும் அவரது இரத்தமும் வழி என்று கண்டுகொண்ட நாம் முடிவுக்கு வேறு எதையோ தேடுகிறோம். அவரை விட்டுவிடுகிறோம். எல்லாவற்றையும் சரிப்படுத்த அதிகப் பிரயாசமும் செலவும் செய்கிற நாம் முடிவை விருப்பத்துக்குரியதாக எதிர்பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு உத்தம ஆத்துமா எனது ஊழியத்தில் உமது வல்லமையை நான் அனுபவிக்க எழுப்புதலுக்காக எந்த கிரயத்தையும் செலுத்தி ஜெபிக்கிறேன் என்று ஜெபிக்கலாம். ஆனால் தந்திரமாக சுயவிருப்பும் சுயமகிமையும் அங்கு நுழைந்துவிடலாம். அப்படியானால் அந்த பாரமான ஜெபத்தின் மூலம் முடிவைப் பெற தேவன் அனுமதிப்பதில்லை.

நமது நோக்கங்கள் சுயவிருப்பங்களைக் கொண்டிராவிட்டாலும் அவை கர்த்தரோடு நல்மனம் பொருந்த ஏதுவாயிருக்க முடியாது. ஆண்டவராகிய இயேசு ஒருவரே நமது முடிவாயிருக்க வேண்டும். நாம் தேவனோடு நல்ல உறவிலிருப்பது எழுப்புதலையோ, வல்லமையையோ பெறுவதற்காகவோ அல்லது அவரால் பயன்படுத்தப்படுவதற்காகவோ அல்ல. ஏதோ ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அல்ல. அவரைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே. நமது பாவங்கள் அவரது கரங்களை நம்மைவிட்டு எடுத்துப் போட்டன. ஒரு மேகம் அவரது அழகிய முகத்தை மறைத்துவிட்டது. அவரது உறவையும் அவரையும் எப்படியாவது மறுபடியும் அடைய வேண்டும். இந்த ஒரே நோக்கத்தோடு மனந்திரும்புதலின் பாதையைத் தேட வேண்டும். அவரே நமது முடிவாயிருக்க வேண்டும். ஆனால் விக்கிரகம் போன்ற சில காரியங்கள் எளிதாக அந்த இடத்தை பிடித்துக் கொள்கின்றன.

ஒரு முறை பத்து குஷ்டரோகிகள் இயேசுவிடம் வந்து சுகம் பெற்றனர். ஆனால் அவர்களில் ஒருவன் மட்டுமே தான் சுகமானதை கண்டபோது இயேசுவிடம் திரும்பி வந்து நன்றி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான். மற்ற ஒன்பது பேரும் பெற்றுக்கொண்ட புதிய வாழ்வின் சந்தோஷத்தின் பாதையில் சென்றுவிட்டனர். அவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு சுகமாகிய முடிவைப் பெற ஒரு ஏதுவாக மட்டுமிருந்தார். ஆனால் திரும்பி வந்து அவர் பாதத்தில் விழுந்த ஒருவன் தன்னை குணமாக்கினவரோடு உறவுகொள்ள வாஞ்சித்தான். இயேசு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள ஏதுவானவர் மட்டுமல்ல அவரே நமக்கு முடிவானவர்.

#### அவர் ஒருவரே திருப்திப்படுத்துகிறவர்

வணக்கத்துக்குரிய நமது ஆண்டவர் தாழ்மையுள்ளவர். நமது ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்ப நாட்களில் சமாதானம், சந்தோஷம், வல்லமை ஆகிய முடிவுகளுக்குக் காரணராயிருக்க விருப்பமுடையவராயிருந்தார். ஆனால் தங்கள் பாவங்களால் மனிதர் சுய விருப்பங்களையே தேவனிடம் கேட்கிறார்கள். சுவிசேஷம் எதை முக்கியப்படுத்துகிறது? வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள். பாவ நிவாரணத்துக்காக அவரது சிலுவையை சிந்தித்து தப்பிக் கொள்ளும் மார்க்கத்தில் சென்று விட அவர் விரும்புகிறார். ஆனால் அவரை மார்க்கமாக நீண்டநாள் பயன்படுத்தி பிற முடிவுகளுக்குச் செல்ல அவர் அனுமதிப்பதில்லை. ஏனெனில் அவை நம்மைத் திருப்திப்படுத்துவதில்லை. நாம் அவருக்காக உண்டாக்கப்பட்டவர்கள். அவரில் இளைப்பாறுதலைப் பெறுமட்டும் நாம் இளைப்பாறுதலடைய முடியாது.

பிற முடிவுகள் அவருடைய இருதயத்தையும் திருப்திப்படுத்த முடியாது. இயேசு சிலுவையில் மரித்தது நம்மை அவரோடு ஒப்புரவாக்க என்று 2 கொரி.5:19 கூறுகிறது. மேலும், "நம்மை இயேசுக் கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" எபேசி.1:6. "....... தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைதாமே ஒப்புக் கொடுத்தார்" தீத்து.2:14.

பிற முடிவுகளை நாடிகளைத்துப் போகும்போது, இயேசு நம்மிடம் வந்து, "நீ உன்னை அர்ப்பணித்து, மனந்திரும்பி, என்னோடு ஒப்புரவானால் சூழ்நிலைகளை எளிதாக்கி வல்லமையும் வெற்றியும் உன் சேவையில் அளிப்பேன் அல்லது எழுப்புதலை அனுப்புவேன் என்று நான் வாக்குப் பண்ணவில்லை, ஆனால் நீ என்னுடன் நடந்தால், மற்றும் பாவம் வந்தவுடனே அதை என்னிடம் காண்பித்து கழுவப்பட்டுவிட்டால் இவைகளை அல்ல என்னைப் பெற்றுக் கொள்வாய். என்னையே உனது வாஞ்சையாகவும் முடிவாகவும் கொள். அப்போது எந்தக் குறைவுமின்றி திருப்தியுடன் வாழலாம். இதுவே உன்னைக் குறித்த தேவ சித்தம் என்று கூறுவார்.

ஆனால் இது நமக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஏனெனில் நாம் உண்மையாக வாஞ்சித்தது அவரையல்ல, அவரது ஈவுகளை நமது சுயநலத்திற்காக என்பதை நாம் ஒத்துக் கொள்ளவே வேண்டும். நாம் அவரையே வாஞ்சிக்காதபடியால் எதையும் அவர் அளிக்கவில்லை.

(3-ம் பக்கம் பார்க்க)

**அன்பான வேண்டுகோள்**

**வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். காணிக்கையை உங்கள் பெயரில் வரவு வைக்கவும், ரசீது அனுப்பவும், அடுத்த ஆண்டு பத்திரிகை அனுப்பவும் அது அவசியம்**

**மொபைல் : 95432 21008**
**வாட்ஸ்அப் : 94897 40295**

வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

## இம்மாத பொன்னான சிந்தனை

### வைரக்கற்கள் கொடுக்காத சமாதானம்

ஒரு வைர வியாபாரி, இந்தியாவில் வசித்த ஒரு பெரிய ஐசுவரியவானுக்கு விலையுயர்ந்த வைரக்கற்களை அனுப்பி வைத்தான். அவ்வைரகற்கள் பரிசுத்த யோவான் சுவிசேஷத்திலிருந்து கிழிக்கப்பட்ட தாள்களில் சுற்றப்பட்டு பெட்டியில் வைக்கப்பட்டு பத்திரமாக அனுப்பப்பட்டது. விலையுயர்ந்த அந்த வைரக்கற்கள் இந்திய கனவானுக்கு வந்து சேர்ந்த சமயம், அவன் அதிகமான மனபாரத்துடன் கவலை நிறைந்த மனிதனாக இருந்தான். வைரக்கற்களை பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்ட பின்பு அந்த ஐசுவரியவானின் கவனம் வைரங்கள் சுற்றப்பட்டிருந்த தாள்கள் மேல் விழுந்தது.

அவன் தற்செயலாக அந்த தாளை வாசித்தபோது தேவனுடைய அன்பை பற்றி கூறும் யோவான் 3:16 வசனம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்ற வசனமும் செய்தியும் அந்த கனவானின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஏனைய யோவான் சுவிசேஷத் தாள்களையும் வாசித்து, வாசித்து ஆறுதலடைந்த அவன், சில நண்பர்களிடம் புதிய ஏற்பாட்டு நூலைப் பெற்று வாசித்து சமாதானம் பெற்றதுடன், சில விசுவாசிகள் உதவியால் இரட்சிக்கப்பட்டு சாட்சியுள்ள மனிதனாக மாறி பலரை கிறிஸ்து இயேசுவின் இரட்சிப்புக்குள் வழிநடத்தவும் காரணமாய் விளங்கினான். "உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள்; ஆகையால் என் ஆத்துமா அவைகளைக் கைக்கொள்ளும்" (சங்கீதம் 119:129).

## வாக்குத்தத்தம்

**நான்** மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்கு கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும் போது,

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் 2 நாளாகமம் 7:13,14.

If I shut up heaven that there be no rain, or if I command the locusts to devour the land, or if I send pestilence among my people;

If my people which are called by my name, shall humble themselves, and pray, and seek my face, and turn from their wicked ways; then will I hear from heaven, and will forgive their sin, and will heal their land. *11 Chronicles 7:13,14*

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே.*

**பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.**

**2021 ஜுன் & ஜுலை** மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். வழக்கம் போல வாசகர் கடிதம் ஒன்றை கீழே அச்சிடுகிறேன் :

பிரியமுள்ள சகோதரர் அவர்களுக்கு எழுதுவது,

தங்கள் பத்திரிகை மாதந்தோறும் வந்துவிடும். தங்கள் பத்திரிகை ஆத்துமாவில் பெலன் கொள்ள பாவத்தை விட்டு விலகி கர்த்தருக்குள் வாழ உபதேசிக்கிறது. தங்கள் பத்திரிகை ஊழியத்திற்காக இந்த சிறு தொகையை பெற்றுக் கொள்ளவும். எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

A.M., சென்னை, CN 1965

மேய் மாதம் 1-ம் தியதி எனக்கு சுகவீனம் ஏற்பட்டது. 5-ம் தேதி கர்த்தர் பரிபூரண சுகம் தந்தார். மேய் 3-ம் தியதி மகனுக்கு சற்று அதிகமான சுகவீனம் ஏற்பட்டது, மகனுக்கும் கர்த்தர் சுகம் தந்தார். மேய் மாதம் கொரோனா 2-வது அலை

### 2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் **தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி, ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

"அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே **மிகுந்த உதாரத்துவமாய்** கொடுத்தார்கள்" 2 கொரி.8:2.

கடுமையாக இருக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறினது போலவும், நீங்கள் அறிந்திருக்கிறபடியும், கொரோனா தொற்று கொடூரமாக மாறி, திரள் திரளாய் தொற்று ஏற்பட்டு, ஜனங்கள் கூட்டம் கூட்டமாக மரிக்கிறார்கள் என்றும் செய்திகள் மூலம் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இந்த எல்லா சூழ்நிலைகள் மத்தியில், ஜுன் மாத பத்திரிகை வெளியிட வேண்டாம் என்று என் மனதில் எண்ணினேன். பிற்பாடு பத்திரிகை அச்சிடுவோம், ஆசிரியர் பங்களிப்பு வேண்டாம் என்று நினைத்தேன்; ஆனால் ஆண்டவர் கிருபையால் மேய் மாதம் 5-ம் தியதி பத்திரிகையின் செய்திகளை அச்சிட (Computer Type Setting) அளித்துள்ளேன். ஆனாலும் காகிதம் வாங்க கடை திறக்குமா, அச்சிடுகிற வேலையாள் (Printer) வரமுடியுமா, மடித்து அஞ்சலகத்திற்கு அனுப்ப முடியுமா என்ற சிந்தனைகளோடு ஆசிரியர் கடிதத்தை எழுதுகிறேன். இவற்றையெல்லாம் எழுதுவதின் ஒரே நோக்கம், நீங்கள் வருகையின் தூதன் பத்திரிகை பணிக்காக தினமும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும் என்பதற்காகவே.

மேய் மாதம் இன்னுமொரு விசேஷம் எனக்கு உண்டு. மேய் மாதத்தில் எனது பிறந்த நாள் வருகிறது. அதனை கடந்த காலங்களில் நான் எவ்வாறு celebrate பண்ணினேன் என்று எழுதுவது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் எனது பிறந்த நாள் அன்று, 92 வயதான எனது மூத்த சகோதரியிடம் ஒரு இனிப்பு பெட்டியுடன் சென்று ஜெபித்தேன், அவ்வளவுதான். கடந்த 2020-ம் ஆண்டு பிறந்த நாள் அன்று எனது நண்பரும் போதகருமாகிய சகோதரன் **சாம் செல்வராஜ்,** சென்னை அவர்களை தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டேன். அவர்கள் மிகவும் அன்புடனும், பாரத்துடனும் தொலைபேசியில் ஜெபித்தார்கள். இந்த ஆண்டு உங்கள் ஜெபத்தையே அதிகமாக எதிர்பார்க்கிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

● **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி:

**வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001

**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.

● **காசோலை** *(Cheque & Draft)*

**வெஸ்லி தேவதாசன்** (Wesley Devadason) என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.

**பத்திரிகை பணி**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
**Punjab National Bank**, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

**வருகையின் தூதன் உபவாச ஊழியம்**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **37060100002557**
**I.O.B.**, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

**முன்னேற்றப்பணி**

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
**Canara Bank**, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

**Mobile:** 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்க தொடர்ச்சி)

## "எல்லாம்"

இவ்வாறு பிற காரியங்களை முடிவாக எண்ணிய பாவத்திற்காக நாம் மனஸ்தாபப்படும்போது ஆண்டவ ராகிய இயேசுவையே நமது ஒரே முடிவாக கொள்ளும்போது நமக்கு வேண்டிய மற்ற எல்லாவற்றையுமே அவர் கொடுக்கிறார். "நம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்ப தெப்படி?" ரோமர் 8:32. எல்லாவற்றை யும் என்பதில் அடங்காதது இல்லை.

சாலமோன் தனக்கு ஞானம் வேண்டும் என்று தேவனிடம் கேட்ட சம்பவத்தை *1 ராஜா 3:5-13* வசனங்களில் படிக்கிறோம். 'நீ விரும்புகிறதை என்னி டத்தில் கேள்' வச.5 என்று தேவன் சாலமோனிடத்தில் கேட்டபோது அவன் சுயநல முடிவுகளை நோக்காமல், "உமது ஜனங்களை நியாயந்தீர்க்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத் தை தாரும்" வச.9 என்று கேட்டான். இதை செவிகொடுக்கும் இருதயம் என்றும் உடைந்த உள்ளம் இருப்பதால் தான் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் சொல்ல அதற்குச் செவி கொடுக்கும் மனநிலை என்றும் விளக்கலாம். சாலோ மோனுடைய இந்த முடிவு தேவனுக்கு அதிக பிரியமாயிருந்தது. அவர் : "நீ உனக்கு நீடித்த நாட்களை கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளா மலும், நீ .... நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக் கொண்டபடியினால், உன் வார்த்தை யின்படி செய்தேன்; ஞானமும் உணர்வு முள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்" *1 ராஜா.5:11-12.* அவன் கேட்ட முடிவை மாத்திரமல்ல அதிகமாகவும் பெற்றுக் கொண்டான் வச.13 படிக்க.

**சாலமோன் விரும்பிய ஒன்றை மட்டுமல்ல அவன் கேட்காத அனேக காரியங்களையும் அவனுக்கு அளித்தார்.** நாமும் சுயநல காரியங்களைக் கேட்பதை விட்டுவிட்டு இயேசுவையே நமது முடிவாக நோக்கும்போது அதோடு அவருக்கு சித்தமான யாவற்றையும் நமக்கு அருளுவார்.

அவரிடம் வரும்போது பிதா விடம் செல்லும் வழியை மாத்திரமல்ல பிதாவையே கண்டுபிடிக்கலாம் என்று இயேசு குறிப்பிட்டபோது அது நாம் தேடும் மற்று எல்லா ஆசீர்வாதங்களை யும் காண்பிக்கிறது. அவர் ஆசீர்வாதங் களுக்கு வழி மாத்திரமல்ல தேவையான ஆசீர்வாதமுமாயிருக்கிறார். அவர் வல்ல மையைப் பெற்றுக்கொள்ளும் வழி மட்டுமல்ல நமது வல்லமையாகவுமிருக் கிறார். அவர் நமது வெற்றிக்கு வழி மட்டுமல்ல, நமது வெற்றியாகவுமிருக் கிறார். சுத்திகரிப்புக்கான வழி மட்டு மல்ல சுத்திகரிப்புமாயிருக்கிறார். சுகம் பெறுவதற்கான வழி மட்டுமல்ல சுகமாக வுமிருக்கிறார். எழுப்புதலுக்கான மார்க்கம் மட்டுமல்ல அவரே எழுப்பு தலாகவுமிருக்கிறார். அவரில் தேவத்துவத் தின் பரிபூரணம் இருப்பதால் அவரில் நாம் பூரணமடைகிறோம் கொலோ.*2:10.*

ஒரு பாவியாக அவரிடம் வரும் போது நமது தேவையை பூர்த்தி செய்கிறவராயிருக்கிறார். கல்வாரியைக் கடந்து சென்று ஆசீர்வாதம் பெற வேண்டியதில்லை. பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குக் கல்வாரி மட்டும் சென்றால் போதும். அங்கு பாவி மனந்திரும்புதலையும் எழுப்புதலையும் இன்னும் பிற ஆசீர்வாதங்களையும் பெறலாம். பாதை முடிவு அனைத்தும் ஒரு நபரில் காணப்படுவதால் மனந்திரும் புவதாலும் விசுவாசத்தாலும் ஒரே வினாடியில் பெறமுடியும்.

### கிறிஸ்துவுக்கு அப்பால் எதுவுமில்லை

கிறிஸ்தவ வாழ்வில் நமக்கு வரும் மனச்சோர்புகளுக்கான பல காரணங் களை இப்போது நாம் புரிந்து கொண்டி ருக்கலாம். நாம் சமாதானம், தூய்மை, வெற்றி, எழுப்புதல் ஆகியவற்றை கூடுதலாக ஆண்டவராகிய இயேசுவுடன் ஆசீர்வாதங்களாக தேடுகிறோம். இக்காரணத்தால் அவை நழுவிவிடலாம். நாம் அதிகமாக ஜெபித்தும், நிபந்தனை களை நிறைவேற்றியும் பயனில்லை. ஆண்டவர் நம்மை உணர்த்தும்படி சிலுவையினடியில் நம்மை நாம் தாழ்த்தி மனந்திரும்புதலுக்காக வேண்டியிருக் கலாம். எனினும் அன்பும் வல்லமையும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் நாம் காணப்படவில்லை.

இதற்கு மாறாக பவுல் சொல்லு வதைப் பார்ப்போம். "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவா யிருக்கிறார்" ரோமர் 10:4. தேவனோடு நாம் சரியாயிருப்பதற்கு நாம் பாடு படுவது மட்டும் ஆண்ட வராகிய இயேசு நமது முடிவல்ல, அவர் எல்லாவற்றிற்கும் முடிவு. சமாதானம், தூய்மை, ஆரோக் கியம், எழுப்புதல் யாவற்றிற்கும் அவரே முடிவாயிருக்கிறார். இந்த ஆசீர்வாதங் களைப் பெற எவ்வளவோ அர்ப்பணம், எவ்வளவோ ஜெபம், சுயஒறுத்தல்கள், பாவ இருதயத்தின் பாவத்தை குறைக்க எத்தனை போராட்டங்கள்! ஆனால் ஆண்டவரிடம் வரும்போது ஒரே நிமிடத்தில் இவைகளைப் பெறலாம். அவரே நமக்கு சமாதானமும், வல்லமை யும் வெற்றியும், எழுப்புதலுமானவர். அவருக்கு அப்பால் எதுவுமில்லை.

**கிணறு மிகவும் ஆழமாயிருக்கிறது**

**எனக்கு ஜீவ நீரில் ஒரு முடக்கு வேண்டும்**

**யாரும் எனது ஆத்தும வாஞ்சையைத் தீர்க்க முடியவில்லை**

**ஒருமுறை ஜீவ தண்ணீர் அருந்த**

**ஒருவர் அருகில் வரும்போது சத்தம் கேட்பது யார்**

**மனிதரின் தேவையின்போது உதவி செய்கிறவர்**

**நான் விசுவாசத்தால் கண்டு கொண்டேன்**

**கிறிஸ்துவே ஜீவ தண்ணீராயிருக்கிறார்**

### எழுப்புதலை தருகிறவர்

அப்படியானால் எழுப்புதலுக் காக ஜெபிக்க வேண்டாமா? நமது தலை யாய கடமை நாமே எழுப்புதலடை வதாகும். நாம் நமது போராட்டத்தின் முடிவில் வந்துவிட்டோம். நமது எல்லா தேவையும் மனந்திருப்புதல் உட்பட அவரே. பின்பு மற்றவர்களோடு சேர்ந்து தேவன் நமது இருதயங்களில் என்ன செய்திருக்கிறார், என்ன செய்யப் போகி றார் என்ற பரந்த வட்டத்தில் ஜெபிக்க வேண்டும். எழுப்புதல் வந்து விட்டது. ஏனெனில் ஒருவரில் ஏற்பட்ட எழுப் புதல் பிறரிலும் ஏற்பட வேண்டும். நமது சாட்சி, ஜெபங்கள், சுயதியாகம் ஆகி யவை அதற்கு ஏதுவாயிருக்க வேண் டும். அதற்கு வழியையும் முடிவையும் கண்டு கொண்டவர்கள் வேண்டும்.

வழியையும் முடிவையும் கண்டு பிடித்தவர்கள் ஆவிக்குரிய உயரத்தை எட்டிவிடவில்லை. அவர்கள் இன்னும் பாவிகளே. அவர்களுக்கும் இயேசுவின் இரத்தம் தேவை, மனந்திரும்புதல் தேவை. இயேசுவே தனக்கு எல்லா வற்றிற்கும் எல்லாம் என்று அவர்கள் கண்டுகொள்வதால் மனந்திரும்புவதில் கருத்தாயிருப்பார்கள்.

### கிறிஸ்துவில் ஆழமாய்ச் செல்லுதல்

இப்படிப்பட்டவர்கள் உத்தம தங்கமாகிய இயேசுவுக்குள் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள். அவர்கள் மற்றவர்களுடைய அபிப்பிராயங்களால் அசையமாட்டார்கள். பலவிதமான கேள்விகளுக்கான விடைகளைக் கண்டு பிடிக்க முயற்சித்தாலும் அவர்களை முதலாவது இரட்சித்த ஆண்டவராகிய இயேசுவின் அதே பகுதியில் ஆழமாக செல்லுகிறார்கள். அனுதினமும் அந்த அனுபவத்தில் ஆழமாகச் செல்லுகிறார் கள். இவ்வாறு ஜீவிக்கிற ஆண்டவரின் நிறைவை தன் வாழ்வில் பெற்றுக்கொள் கிறார்கள்.

எனவே இயேசுவை நமது முடிவாகப் பார்ப்போம். அவரே எளிதில் நாம் கண்டுபிடிக்கக்கூடிய வழியுமா யிருக்கிறார். வழியும் முடிவும் அவ ருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப் பட்டபடியால் நம்மைப் போன்ற பாவிகளுக்குத் தேவையாயிருக்கிறது.

**இயேசு எனது மேய்ப்பர்**
**நேசர், நண்பர், தீர்க்கர்**
**என் ஆசாரியர், என் ராஜா,**
**என் ஆண்டவர், என் ஜீவன்,**
**என் வழி, என் முடிவு**
எனது துதியை ஏற்றுக்கொள்வீராக.

**இயேசுவும் அவரது இரத்தமும் வழி என்று கண்டு கொண்ட நாம் முடிவுக்கு வேறு எதையோ தேடு கிறோம். அவரை விட்டுவிடுகிறோம். எல்லாவற் றையும் சரிப்படுத்த அதிகப் பிரயாசமும் செலவும் செய்கிற நாம் முடிவை விருப்பத்துக்குரியதாக எதிர்பார்க்கிறோம்.**

* * * *

"**என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணு கிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" I சாமுவேல் 2:30

# இக்கட்டுக் காலத்தில் விசுவாசமும் ஊழியமும்

## *Faith and ministry in the time of Crisis*

Rich Carmicheal

தேசங்களின் சூழ்நிலைகள் அச்சமூட்டுகின்றன. கொரோனாவின் தாக்கம் மட்டுமல்ல, சன்மார்க்க ஆவிக்குரிய நிலைகளும் பாதிப்புக்குள்ளாகிவிட்டன. துன்மார்க்கம், அராஜகம், வன்முறை, மூர்க்கம், புரட்சி, குழப்பம், பிளவுகள் ஆகிய தீமைகள் தலைதூக்கிவிட்டன. நிதானித்தறியும் தன்மையை இழந்துவிட்ட மக்கள் நன்மையைத் தீமையென்றும், தீமையை நன்மையென்றும் கூறத் துணிந்து விட்டனர் *ஏசா.5:20.* பாரம்பரிய நற்குணங்களும் புறக்கணிக்கப்பட்டு கிறிஸ்தவத்துக்கு எதிராகப் பகைமை வளர்ந்து வருகிறது.

இவையெல்லாம் கர்த்தரையும் அவருடைய வசனத்தையும் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகள். "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷனுடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" *ரோமர் 1:18* "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" *வச.21.* "தங்களை ஞானிகளென்று கூறியும் அவர்கள் மதிகேடராகவும், அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர், மிருகங்கள் ஆகியவற்றின் ரூபங்களுக்கு ஒப்பாக்கினார்கள்" *வச.22-25.* அப்போஸ்தலனாகிய பவுல் பட்டியலிடும் பாவங்கள் இன்றைய பாவங்களுக்கு மிகவும் ஒத்துப்போகின்றன *வச.29, 31* வாசிக்க.

### தேவன் தமது ஜனங்கள் மூலமாக கிரியை செய்கிறார்

தேவ ஜனம் இந்த நிலையிலிருந்தாலும் வாழ்வுக்கும் ஊழியத்துக்கும் ஆதாரமாயிருப்பவர் தேவன். நெகேமியாவின் புத்தகத்தில் ஆரம்பத்தில் யூதா எருசலேம் மக்களின் நிலையை படிக்கிறோம். "மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள்" *நெகே.1:3.* ஆனால் சம்பவம் முடியும் போது *நெகே.12:43*-ல் அவர்கள் மகிழ்ச்சியுடனிருப்பதைப் படிக்கிறோம். இதற்கு காரணமாயிருந்தவன் விசுவாசமும் தைரியமும் நிறைந்த நெகேமியாதான். அவன் தேவ வாக்குகள் மீது விசுவாசமும் நம்பிக்கையும் நிறைந்தவனாய் நம்பிக்கையற்ற நிலையிலும் தேவனுடைய இரக்கத்தையும் உதவியையும் தேடினான்.

அப்போஸ்தலனாகிய பவுல் 276 பேர் பிரயாணம் பண்ணிய கப்பலில் புயலில் அகப்பட்டுக் கொண்டார். பல நாட்கள் நீடித்த புயலால் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. "........ இனி தப்பிப் பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று" *அப்.27:20.* பவுலுக்கு ஒரு உறுதியான வாக்கு கிடைத்தது. "இதோ உன்னுடனே யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார்" *அப்.27:24.* அவன் கர்த்தருடைய வாக்கை விசுவாசித்து அதற்கேற்ப நடந்துகொண்டான். அனைவரும் கப்பற் சேதத்தில் தப்பிப் பிழைத்தனர்.

தமது பிள்ளைகள் மூலம் தேவன் எவற்றையெல்லாம் செய்யக்கூடியவர் என்பது மேற்கூறிய சம்பவத்திலிருந்து விளங்குகிறது. கப்பல் சேதமடைந்த போதும் பிரயாணிகள் அனைவரும் பாதுகாக்கப்பட்டனர். பின்பு எருசலேமில் ஏற்படுத்திய மாற்றங்கள் தேவ செயல்களாகும். தேவன் வாக்களித்ததை நிச்சயம் நிறைவேற்றுவார். ஆகவே எரேமியா, "ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ தேவரீர் உம்முடைய மகாபலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும் வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர், உம்மால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" *எரே.32:17* என்று குறிப்பிடுகிறார். மனிதரால் விடுவிக்கக்கூடாத சிறைப்பட்டவர்களைக் குறித்து அவர் இப்படி கூறினார்.

*2 நாளா.7:14*-ன் படி தேவ பிள்ளைகள் நடந்து கொண்டால் தேவனால் செய்யக்கூடாத காரியம் ஏதேனுமில்லை. அவர் பரலோகத்திலிருந்து கொண்டே ஜெபத்தை கேட்டு மக்களின் பாவங்களை மன்னித்து, தேசம் முழுமைக்கும் க்ஷேமத்தை அளிக்க ஆயத்தமாயிருக்கிறார்.

### தேவன் நமது அடைக்கலமும் துணையும்

தனிப்பட்ட வாழ்வில் இக்கட்டான சூழலில், கர்த்தர் உங்களை நிலைநிறுத்த வல்லவர் என்று விசுவாசிக்கிறீர்களா? 46-ம் சங்கீதத்திலுள்ள சத்தியங்களையும் வாக்குத்தத்தங்களையும் கவனிப்போம். வாழ்க்கை மிக எளிதானது என்று வேதம் நமக்குப் போதிக்கவில்லை. தொல்லைகள் வழியாகவும் சில வேளைகளில் கைவிடப்பட்ட நிலையிலும் நாம் கடந்து செல்ல வேண்டியதாயிருக்கலாம். ஆனால் எந்த ஆபத்திலும் தேவன் நமது அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர் என்று வாக்களிக்கப்பட்டுள்ளது.

**தேவன் நமது அடைக்கலம் :** அவர் நமது அடைக்கலமாயிருப்பதால் நாம் அவரிடம் ஓடிச்சென்று அவரை நம்பி முழு பாதுகாவலைப் பெற்றுக் கொள்ளலாம். *சங்.57:1; 91:4* ஆகிய வசனங்களின்படி அவரது செட்டைகள் நமக்கு அடைக்கலம் தரும். அவரது நித்திய புயங்கள் நம்மைத் தாங்குகின்றன. "அநாதி தேவன் உனக்கு அடைக்கலம், அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" *உபா.33:27.* அவர் நமது கன்மலை, நமது கோட்டை, உயர்ந்த அடைக்கலம். எனவே நாம் தொடர்ந்து அங்கு பாதுகாவலுடன் தங்கலாம் *சங்.71:3.*

**தேவன் நமது பெலன் :** நமது சொந்த பெலன் குறைவானது. எனவே ஒரு நிலையில் அது முடிந்துபோகும். ஆனால் தேவனுடைய பெலன் அளவற்றது. "நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்" *சங்.147:5.* அவருடைய மகத்துவம், வல்லமை, பெலன் ஆகியவற்றால் நட்சத்திரங்கள் தங்கள் தங்கள் இடங்களில் நிற்கின்றன. நாம் பெலவீனராயிருக்கும்போது அவரே காத்திருந்து பெலனை பெற்றுக்கொள்ளும்படி நம்மை வற்புறுத்துகிறார் *ஏசா. 40:26,31.* "சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும்" *கொலோ.1:11.* ஆகவே பவுல் "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" *பிலி.4:13* என்று தைரியமாக சவால் விடுகிறார்.

பவுலின் வாழ்வின் ஏறக்குறைய இறுதிப் பகுதியில் சவாலும் இக்கட்டும் நிறைந்தே காணப்பட்டன. ஆனால் அவர் கூறிய சாட்சி, "கர்த்தரோ எனக்கு துணை நின்று என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்கும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும் என்னைப் பலப்படுத்தினார்" *2 தீமோ.4:17.* சொந்த வாழ்வானாலும் ஊழியமானாலும் ஆண்டவரை நோக்கிப் பார்ப்போம். அவர் தெய்வீக பெலனைத் தந்து, நம்மிடம் அவர் ஒப்புவித்த பணிகளை நிறைவேற்ற உதவி செய்வார். கர்த்தரிலும் அவர் வல்லமையின் சத்துவத்திலும் பலப்படுவோம் *எபேசி.6:10.*

**தேவன் நமக்கு துணையாயிருக்கிறார் :** "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" என்று 121-ம் சங்கீதத்தில் படிக்கிறோம். எல்லாவற்றையும் படைத்த கர்த்தர் எந்த தேவையையும் சந்திக்க வல்லமையுடையவர்.

யோசபாத்தின் நாட்களில் ஜனங்கள் கூட்டாக யூதாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தார்கள். யூதா மக்கள் அப்போது தேவனிடம் உதவி கேட்கும்படி கூடினார்கள் *2 நாளா.20:4.* தேவன் ஆச்சரியமாக அவர்களை விடுவித்தார். தேவனால் கூடாதது எதுவுமில்லை.

46-ம் சங்கீதம் தேவன் நமக்கு அனுகூலமான துணை என்று ஞாபகப் படுத்துகிறது. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். எனவே எந்த சூழலிலும் பயப்பட வேண்டாம். "நான் உன்னை விட்டு விலகுவதில்லை, உன்னை கைவிடுவதுமில்லை" என்று அவர் கூறியிருக்கிறார். "அதினால் நாம் தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன்" *எபி.13:5-6* என்று சொல்லலாம். "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி, உனக்கு சகாயம் பண்ணுவேன், என் நீதியின் கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" *ஏசா.41:10.*

# நீங்கள் கேட்டால் - நான் செய்வேன்

**If ye ask - I will do**

Louisa Vaughan

1903-ம் ஆண்டு பெண்களுக்கான ஒரு வகுப்பை சீனாவில் நடத்த ஆரம்பித்தேன். ஐந்து ஆண்டுகள் சீன மொழியைக் கற்கவும் கிறிஸ்தவ பணி விடைகளில் ஈடுபடவும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பின்பு நான் சகோதரி களுக்கு தேவ கிருபையால் சுவிசேஷத் தை அறிவித்தேன்.

அழகிய லாவோ மலைகளுக் கிடையிலுள்ள டுங் கியா அன் என்ற சிறிய கிராமத்தில் சீனப்போதகர் 25 பெண்களை திரட்டி அவர்களுக்கு கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்து அறிவிக்க அழைக்கப்பட்டேன். அவர்கள் சிறிதளவாயிலும் எழுத வாசிக்க தெரிந்த வர்களாயிருப்பார்கள், எனவே அவர் களுக்காக ஏதேனும் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

ஆனால் தனித்தனியாக அவர் களோடு வகுப்பில் நான் பேச ஆரம் பித்தபோது அந்த நம்பிக்கை அற்றுப் போயிற்று. ஒரு பெண் அவளுக்குத் தான் ஒன்றும் போதிக்க முடியாது, ஏனெனில் அவளது இருதயம் மிகக் கடினமாக இருப்பதாக கூறினாள். இன்னொரு பெண் தன் வாழ்வில் இதுவரை எதையும் கற்றுக்கொண்டதில்லை, எனவே எப்படி கற்றுக் கொள்ள முடியும் என்று தயங்கி னாள். மேலும் தனது கையில் ஒரு கைக்குழந்தையும் அதோடு இன்னொரு 3 வயது சிறுகுழந்தையும் இருப்பதாகவும் அவர்களைக் கவனிப்பதோடு எப்படி படிக்க முடியும் என்று கேள்வி எழுப்பி னாள். தொடர்ந்து 60 வயதை தாண்டிய ஒரு மூதாட்டி கண்களை துடைத்துக் கொண்டு, நீங்கள் எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது நன்று, ஆனால் வயோதிபம் காரணமாக என் கண்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, எதையும் தெளிவாக பார்க்க முடியாத நான் எப்படி புத்தகம் படிக்க முடியும்? என்றாள்.

அனைத்து பெண்களும் இப் படிப்பட்ட நிலைகளில் காணப்பட்ட னர். அவர்கள் பள்ளிக்குச் சென்றதில்லை. சிறு வயதிலிருந்தே தாங்கள் படிக்க முடியாதவர்கள் என்று சொல்லப்பட்டது அவர்கள் எண்ணத்தில் பதிந்துவிட்டது. அவர்களால் கவனத்தை ஒருமுகப் படுத்திப் படிக்க முடியவில்லை.

## அதைரியம்

ஆஜர் பதிவுசெய்து முடித்த போது நான் மிகவும் அதைரியத்துடன் காணப்பட்டேன். "இவர்களுக்கு நான் எப்படி போதிக்கமுடியும்? போதகர் அனுப்பியபடியால் இவர்கள் வந்திருக் கிறார்கள். அவர்கள் மனப்பக்குவம் போதாது. படிக்க அவர்களுக்கு ஆசையு மில்லை" என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

இவ்வாறு மனச்சோர்புடன் என் அறையில் ஜெபிக்கச் சென்றேன். தேவன் என்னோடு பலமாக பேசினார். "தேவனி டமுள்ள உன் விசுவாசம் எங்கே?" இதற்கும் விசுவாசத்திற்கும் என்ன தொடர்பு? இது எனக்கு அளிக்கப்பட்ட பணி. மனிதரால் இது கூடாதது என்று நான் பதிலளித்தேன். "மனிதனால் இது கூடாததுதான், ஆனால் தேவனால் எல்லாம் கூடும்" என்று பதில் வந்தது.

நான் முழங்காலில் விழுந்து எனது அறிவீனம் இயலாமை ஆகிய வற்றை அறிக்கையிட்டேன். அவர் கூறிய வேதபகுதியின் சரியான பொருளை எனக்குத் தெரிவிக்கும்படி ஜெபித்தேன். தொடர்ந்து இரண்டு வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டன. அதற்கு முன் இருண்ட அந்த அறையில் ஒரு வெளிச்சம் பிரகாசித்தது. "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்; என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" யோவா.14:13-14.

எனது பாரம் உருண்டோடியது. இந்த கிருபையின் வார்த்தைகள் எனக்கு முழு ஆதரவாயிருந்தன. நான் ஒன்றும் செய்ய வேண்டியதே இல்லை. சர்வ வல்ல தேவனிடம் அதாவது எனது இரட்சகரும் இந்த பெண்களின் இரட்ச கருமாகிய ஆண்டவர் நமக்காக மரித்தவர். நாம் கேட்கிற யாவையும் தருவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். எப்படி எப்போது அவர் தமது வாக்கை நிறைவேற்றுவார் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் இந்த வார்த்தைகளின் சத்தியத்தை இருதயத்தில் உணர்ந்தேன். "நாம் ஒரு அரசரிடம் வருகிறோம். மிகப்பெரிய விண்ணப்பங்களை கொண்டு வருகிறோம்". நான் ஒரு சிறிய விண்ணப்பம் செய்தேன். இயேசுவுக்காக என்னை மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டிக்கொண்டேன். ஆவியானவரை ஊற்றி பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் அம்மக்கள் கண்டித்து உணர்த் தப்படவும், ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக வெளிப்படுத்தவும், பாவத்திலிருந்தும் அதின் கறையி லிருந்தும் தமது விலையேறிய இரத்தத் தால் கழுகவும், அவரது தூய ஆவியால் நிரப்பவும் அதன் மூலம் அவர்கள் வீடு திரும்பும்போது இயேசுவுக்கு சாட்சியா யிருக்கவும் ஜெபித்தேன்.

## பதிலளிக்கப்பட்ட ஜெபம்

கல்வியறிவற்றவர்களும், மூட நம்பிக்கைகளுக்கு அடிமைப்பட்டவர் களாகிய அவர்களிடம் திரும்பவும் சென்றேன். தேவன் தமது அற்புதங்களை ஒவ்வொரு இருண்ட வாழ்விலும் நிகழ்த்தும்படி பொறுமையுடன் காத் திருந்தேன்.

இதற்கிடையில் இந்த ஜெபத் தை அவர்களுக்குக் கற்பித்தேன். "பரலோக தந்தையே, என் பாவங்களை மன்னித்து, உமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் அவற்றைக் கழுவியருளும். உமது ஆவியால் என்னை நிரப்பும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன்". சில பெண்கள் மூன்று நாட்கள் அதிகநேரம் உட்கார்ந்து புத்தியாகச் சரியாக இதனை கற்றுக்கொண்டனர்.

முதல் நாள் மிகவும் மெதுவாகச் சென்றது. தேவன் எனது ஜெபத்தைக் கேட்டது போன்ற எந்த அடையாளமும் தெரியவில்லை. அடுத்த நாள் காலையும் அப்படியே இருந்தது. அன்று பிற்பகல் நாங்கள் இணைந்து முழங்காற்படியிட்டு அந்த ஜெபத்தை மறுபடியும் மறுபடியும் ஏறெடுத்தபோது ஒரு பெண் கண்ணீ ரோடு தன் பாவங்களை அறிக்கை யிட்டாள். அவள் தனது பாவங்கள் மன்னிக்கப்படவும், இயேசுவின் இரத்தம் பாவங்களைக் கழுகவும், தூய ஆவியான வர் அவளுடைய இருதயத்தை நிரப்பி அதில் வாசம் பண்ணவும் கிறிஸ்துவில் ஒரு புது சிருஷ்டி உருவாக்கப்பட்டது.

அடுத்த சில நாட்களில் வகுப்பு முழுவதும் கர்த்தருடைய இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டது. அவர்கள் ஆச்சரியமாக மறுரூபமடைந்த படியால் கிறிஸ்துவை அறிந்துகொள்ள அதிகமான வாஞ்சை கொண்டனர். நானும் அவர்களைத் திருப்திப்படுத்த சமயம் எடுத்துக்கொண்டேன். என்னு டைய பெலனைச் செலவிட்டு போதனை யிலும் உதவியிலும் ஈடுபட்டேன்.

நான் சீனாவில் வாழ்ந்த அடுத்த பத்து ஆண்டுகளில் இதே விதமாக ஐந்துக்கும் அதிகமான வகுப்புகளை ஆண்டுதோறும் நடத்தினேன். யோவா 14:13-14 வசனங்களை பயன்படுத்தி விசுவாச ஜெபத்தின் மூலம் தேவனை நம்பி பணி செய்தேன். இந்நாட்களில் ஒரு பெண் கூட இரட்சிக்கப்படாமல் என் வகுப்பிலிருந்து வெளியேறவில்லை.

## இழந்துபோன கணவனுக்காக ஜெபம்

ஒரு வெள்ளைக்காரப் பெண் சீனமொழி பேசுவதைக் கேள்விப்பட்ட அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஆச்சரியத்துடன் நான் பேசுவதைக் கேட்க வந்தாள். நான் கற்பித்த ஜெபத்தை அவள் கேட்டபோது அவளும் அதைக் கற்றுக்கொள்ளலாமா என்று கேட்டாள். அவளிடம் அவளுக்கு ஒரு இரட்சகர் வேண்டுமா? அவள் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமா என்று கேட்டபோது 'ஆம்' என்று விடையளித்தாள். அவளை வகுப்பில் சேர்த்துக்கொண்டேன். பிற்பகலிலிருந்து வகுப்பில் மற்றவர்களோடு அவளும் உட்கார்ந்தாள். அனைவரும் முழுங்காற் படியிட்டு ஜெபிக்க அழைப்புக் கொடுத்த போது அவள் கண்ணீரோடு அழுது தன் பாவங்களை அறிக்கையிட்டு, ஆண்ட வராகிய இயேசு அவள் பாவங்களை மன்னித்து இருதயத்தை கழுகும்படி ஜெபித்தாள்.

அன்று மாலையில் யோ.14:13-14ல் அடங்கிய வாக்குத்தத்தங்களை கூறி, அவை அவளுக்குச் சொந்தம் என்றேன். அப்போது அவள் ஆண்டவராகிய இயேசு தன் கணவனை இரட்சிப்பாரா

(5-ம் பக்க தொடர்ச்சி)

எனக் கேட்டாள். அவன் குடிகாரன், திருமண நாளிலிருந்தே ஒரு நாளும் குடிக்காமல் வீட்டிற்கு வந்ததில்லை. அதிகமான பணத்தை அவன் மதுபானத்திற்குச் செலவு பண்ணுவதால் எனக்கும் பிள்ளைகளுக்கும் சரியான உணவு இல்லை. குளிர்காலத்தில் போர்த்திக் கொள்ள போதுமான ஆடைகளுமில்லை. இத்தகைய மனிதனையும் இயேசு இரட்சிப்பாரா? எனக்கேட்டு நின்றாள். நான் 'ஆம்' என்றேன். "அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே இவ்வுலகில் வந்தார்" என்பதை விசுவாசிக்கிறாயா? என்று கேட்டேன். அவள் சத்தமிட்டு அழுது, "ஆம், ஆனால் நான் அறிவற்றவள். எப்படி ஜெபிப்பது என்று எனக்குத் தெரியாது. நீங்கள் எனக்காக ஜெபிப்பீர்களா?" என்று கேட்டாள்.

இந்த விஷயத்தை நான் வகுப்பில் கொண்டு வந்து, இந்த மனிதனுக்காக அனைவரும் ஜெபிக்கும்படி கூறினேன். இவ்வாறு இரண்டு வாரங்கள் சென்றபோது வகுப்புகள் முடிந்து விட்டன. நான் இன்னொரு பகுதிக்கு ஊழியத்திற்காகச் சென்றுவிட்டேன்.

### மாற்றமடைந்த மனிதன்

ஒரு ஆண்டுக்குப்பின் மறுபடியும் இப்பகுதிக்கு திரும்ப வந்தேன். காலை வகுப்பு ஆரம்பித்த போது அப்பெண் வகுப்பில் முதலாவது வந்து உட்கார்ந்திருந்தாள். ஓடி வந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டு தேவன் தனக்குச் செய்த நன்மைக்காக தேவனைத் துதித்து இந்த சம்பவத்தைக் கூறினாள்.

"நான் ஒரு வருடத்துக்கு முன்பாக வகுப்புகள் முடியும்போது ஆண்டவரை அறிந்துகொண்டபடியால் வீட்டிற்குச் சென்று என் கணவரிடம் நான் கிறிஸ்தவளாகிவிட்டேன் என்று கூறினேன். அவர் கோபத்தில் என்னை அடித்ததில் ஒரு மாதம் படுக்கையிலிருந்தேன். தொடர்ந்து ஆறு மாதங்கள் என்னை தகாத வார்த்தைகளாலும் துன்புறுத்தி வந்தார். ஆனால் நான் அவருக்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். அவர் புரியாமல் இப்படி செய்வதால் அவரை மன்னிக்கும்படி தேவனிடம் கேட்டேன்.

"ஒரு நாள் காலையில் கடைத்தெருவிலிருந்து நேரத்தோடு முகமலர்ச்சியுடன் வருவதை முதல் முறையாக பார்த்தேன். ஆச்சரியத்தோடு காரணத்தைக் கேட்டேன்.

"நானும் உன்னிடம் அதைத்தான் கேட்க வந்தேன். நான் நல்ல மனநிலையில் இருக்கிறேனா? இன்று சந்தையில் வேலைமுடிந்து மதுபானக் கடைக்குச் சென்றேன். என் காலை வாசற்படியில் வைக்கவும் எனக்குள்ளிருந்து ஒரு பெரிய சத்தம் 'உள்ளே போகாதே வீட்டுக்குப் போ' என்று கூறியதைக் கேட்டேன். நான் திடுக்கிட்டதில் என் பணப்பை கீழே விழுந்து நாணயங்கள் சிதறின. ஏதோ சிறுவர்கள் கேலி பண்ணுகிறார்கள் என்று மனதைத் திடப்படுத்தினேன். ஆனால் பக்கத்தில் எவருமில்லை. குழப்பமடைந்த நான் என்னையே புத்தியற்றவன் என்று எண்ணிக்கொண்டேன். மறுபடியும் வாசலில் என் காலைத் தூக்கி வைத்த போது இன்னும் அதிக பலத்த சத்தமாக 'உள்ளே போகாதே வீட்டிற்குப் போ' என்ற சத்தம் எனக்குள் கேட்டது. உடனே வீடு திரும்பினேன். அதிக பயத்தால் வேகமாக வீடு வந்து சேர்ந்து விட்டேன். எனக்கு என்ன நடந்ததோ" என்றார்.

எனக்குக் காரியம் தெரியும். அது ஆண்டவராகிய இயேசுவின் குரல். அவர் பரம தந்தையின் குமாரன். அவர் உங்களை இரட்சிக்க சிலுவையில் மரித்தார். நீங்கள் மதுபானக்கடைக்குச் செல்வதை அவர் விரும்பவில்லை. மதுபானம் அருந்தி நஷ்டமடைவது அவருக்கு பிரியமில்லை. அவரது பரிசுத்த ஆவியானவரின் குரலே உங்களோடு பேசியிருக்கிறது என்றேன்.

அவர் திகைத்து விட்டார். இயேசுவே நமது இரட்சகர் என்பதை மறுபடியும் மறுபடியும் கூறினேன். "இதை ஏன் நீ எனக்கு முன்னே சொல்லவில்லை? புரிந்து கொள்ளாமலிருந்தேன். இனி நான் மதுபானம் அருந்துவதில்லை" என்றார்.

அதுபோல அவர் ஒருபோதும் குடிக்கவில்லை. உத்தம மனமாறுதலைப் பெற்றுக்கொண்டார். சபையில் இருவரும் அங்கத்தினராகச் சேர்ந்தனர். பிள்ளைகளை ஒரு கிறிஸ்தவ பள்ளியில் சேர்த்தனர். கணவனது இரட்சிப்பிற்குப் பின்பு அப்பெண் நான்கு வருடங்கள் ஆசீர்வாதமாக வாழ்ந்து இயேசுவின் இரட்சிக்கும் வல்லமைக்கு சாட்சியாக காணப்பட்டனர்.

## ஒழுக்கத்திற்கான விசேஷித்த சட்டங்கள்

***Special rules of conduct***

J.C. Ryle (1816-1900)

ஒரு வாலிபனின் வாழ்வில் ஏற்படும் சந்தோஷங்கள், துக்கங்கள் நம்பிக்கைகள், பயங்கள், சோதனைகள், கடினங்கள், தவறான தீர்ப்புகள், இடம்மாறிய உறவுகள், தவறுகள், விருப்பங்கள் போன்றவை சூழ்ந்துகொண்டு அவனைத் தொடருவதுண்டு. ஒரு வாலிபன் சரியான பாதையில் செல்லவும், அவனைக் கெடுத்து தவறுகளும், பாவங்களும் செய்யும்படி தூண்டும் பாவங்களிலிருந்து தப்பிக்கொள்ளவும் வழி நடத்துவது அவசியம்.

அனைத்து வாலிபரும் கடைபிடிக்க வேண்டிய சில நியதிகளை இங்கே குறிப்பிடுகிறேன். அவைகள் நிச்சயமாகப் பின்பற்றப்பட வேண்டும்.

### ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விலகுதல்

உங்கள் இருதயங்களை ஆராய்ந்து பாருங்கள். தேவ பார்வையில் தவறான ஏதேனும் பழக்கம் இருக்கிறதா? தெரிந்தால் தாமதமின்றி அதோடு போராடுங்கள். அதை விட்டுவிட தீர்மானம் பண்ணுங்கள்.

அனுமதிக்கப்பட்ட பாவம் மனக்கண்களை குருடாக்கி, மனசாட்சியைக் கொன்றுவிடுகிறது. அது சிறியதாயிருந்தாலும் ஆபத்தானதுதான். ஒரு சிறிய துவாரம் பெரிய கப்பலை மூழ்கச் செய்யும். ஒரு சிறிய தீப்பொறி பெரிய காட்டைக் கொளுத்தும். அதுபோல அனுமதிக்கப்பட்ட பாவம் அழிவில்லா ஆத்துமாவை நாசப்படுத்தும். நான் சொல்லும் இந்த உபதேசத்தை கேட்டு, எந்த பாவத்திற்கும் அனுமதியளிக்காமலிருங்கள். கானானியர் அனைவரையும் கொன்று போட வேண்டும் என்பது இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. எனவே ஈவு இரக்கம் காட்டாமல் எந்த சிறிய பாவங்களுக்கும் இடங் கொடாதிருங்கள். "திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும், சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள்" உன்.2:15 என்கிறார் சாலமோன் ஞானி.

எந்த ஒரு பொல்லாத மனிதனும் அவனது ஆரம்ப நாட்களில் பொல்லாதவனாயிருப்பதில்லை. அவன் சிறிய மீறுதல்களிலிருந்து ஆரம்பிக்கிறான். கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி அவனது மீறுதல்கள் அதிகரித்து அவன் மிகப் பொல்லாதவனாகிறான். ஆசகேல் தான் செய்யப்போகிற பயங்கரமான பாவத்தைக் குறித்து எலிசா சொன்ன போது, "இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம்" *2 ராஜா.8:13* என்றான். ஆனால் அவனுடைய இருதயத்தில் பாவம் வேர் ஊன்ற இடமளித்து இறுதியில் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டான்.

வாலிபரே, ஆரம்பத்திலேயே பாவத்திற்கு எதிர்த்து நில்லுங்கள். அவை மிகச்சிறியவைகளாகவும், முக்கியத்துவமற்றவைகளாகவும் காணப்படலாம். ஆனால் நான் சொல்வதை கவனியுங்கள். அவற்றை எதிர்த்துப் போராடுங்கள். அவற்றோடு இணக்கம் கொள்ள வேண்டாம். எந்த ஒரு பாவமும் அமைதியாகத் தங்கியிருக்க அனுமதிக்கவே வேண்டாம்.

"அக்கிரமத்தின் தாய் ஒரு குள்ளனுடைய இறகைவிடப் பெரியதல்ல" என்று ஒரு பழமொழி கூறுகிறது. ஒரு ஊசியின் முனை மிக நுண்ணியது, ஆனால் அதில் ஒரு துவாரம் இடப்படும் பொழுது அது நீண்ட நூலை இழுத்துச் செல்லும். 1கொரி.5:6-ல் பரி.பவுல் கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? என்று எச்சரித்திருக்கிறார்.

அனேக வாலிபர்கள் கவலையுடனும் வெட்கத்துடனும் நான் கூறியது போன்று தங்கள் அனுபவங்களைக் கூறுவார்கள். அவர்கள் ஆரம்பத்தில் பொய், நேர்மையின்மை போன்றவற்றை சிறிய விஷயங்களில் காண்பித்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தார்கள். பின்னர் அவை அவர்களுக்கு மேலேயே வளர்ந்துவிட்டன. படிப்படியாக அதிகமதிகமான மோசமான நிலைக்குச் சென்று பாவத்தால் மேற்கொள்ளப்பட்டு இறுதியில் சமாதானம், நற்குணம், நிம்மதி போன்றவற்றை இழந்து ஆத்துமாவையே இழந்து நிற்கின்றனர். மனச்சாட்சியில் ஒரு சிறு இடைவெளியை அது சிறிதுதானே என விட்டுவிட்டபடியால் அது பெரிதாகி சுவர் முழுவதையும் விழச்செய்கிறது.

சத்தியம், நேர்மை ஆகிய பண்புகளில் மிக ஜாக்கிரதை வேண்டும். மனச்சாட்சியை சிறிதளவும் தவறவிடக்கூடாது. லூக்.16:10-ன் படி "கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்". உலகம் பாவத்தைக் குறித்து எளிதாகப் பேசுவதைக் கவனிக்க வேண்டாம். அனைத்துக் கட்டிடங்களும் சிறு சிறு கற்கள் மூலமாகவே கட்டப்படுகின்றன. எல்லாக்கற்களும் ஒன்றுபோல முக்கியமானவைகள். அதுபோல அனைத்து பழக்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாக செயலாக்கப்பட்டு இறுதியில் பெரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆயினும் முதலாவது வைக்கப்படும் கல் மிக முக்கியமானது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் தொடரும்' என்பது முதுமொழி. சாத்தான் உங்கள் இருதயத்தில் முதலில் ஒரு சிறு பாவத்தை அனுமதிக்கச்செய்து பின்பு இருதயம் முழுவதையும் தனக்குச் சொந்தமாக்கி விடுகிறான். "தேவனுக்கும் நமக்குமிடையில் சிறியது என்பதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில் தேவன் முடிவற்றவர்" என்று வில்லியம் பிரிட்ஜ் என்ற ஞானவான் கூறியிருக்கிறார்.

ஒரு ஆலய கோபுர உச்சியிலிருந்து கீழே வந்துசேர இரண்டு வழிகளுண்டு. இரண்டு விதங்களிலும் கீழே வந்து சேரலாம். ஒன்று மேலேயிருந்து கீழே குதித்து விடுவது, மற்றது படிகள் வழியாக மெதுவாகக் கீழே இறங்குவது. நரகத்திற்குச் செல்வதற்கும் இரு வழிகளிருக்கின்றன. முதல் பாதையில் செல்பவர்கள் அனேகமாக இல்லை. ஆனால் பெரும்பாலானோர் சிறு சிறு பாவங்களை செய்து கொண்டே அனேகப் படிகளை கடந்து நரகத்தை அடைகிறார்கள். ஒவ்வொரு நாளும் வாழ்வு சிறிது சிறிதாக தாழ்வடைந்து இறுதியில் நரகத்தை அடைகிறது. யாரேனும் ஒரே பாவத்தில் திருப்தியடைவதுண்டா? ஜெரெமிடெய்லர் பாவம் ஒரு மனிதனில் படிப்படியாக வளருவதைக் குறித்து, "முதலாவது பாவம் மனிதனை அதிர்ச்சியடையச் செய்யும். பின்பு விருப்பமடையச் செய்யும், தொடர்ந்து எளிதாக்கி, மகிழ்ச்சியூட்டி, அடிக்கடி செய்யும்படி தூண்டி, அதைப் பழக்கமாக்கி இறுதியாக அவனில் அதை உறுதிப்படுத்தி விடுவதால், அவன் மனம் வருந்த இயலாதவனாகி பிடிவாதமாய் அதில் நிலைத்திருந்து ஒருபோதும் மனந்திரும்ப முடியாதவனாக அழிவுக்குப் பங்காகிறான்" என்று விளக்குகிறார்.

வாலிபரே உடனே அறிந்து செய்யும் பாவத்தை விட்டுவிடுங்கள்.

## பாவம் செய்வதற்கு ஏதுவான அனைத்து தருணங்களையும் தவிர்த்து விடுங்கள்

"தீய செயல்களிலிருந்து பாதுகாப்பாயிருக்க விரும்புகிறவன் தருணங்களை பரவலாக தவிர்க்க வேண்டும்" என்று Bishop Hail என்பவர் கூறியுள்ளார். நாம் பாவம் செய்யக்கூடாது என்று தீர்மானிப்பது மட்டும் போதாது, கவனமாக அதை நெருங்காதபடி தூரமாயிருக்க வேண்டும். இதற்காக நாம் வாசிக்கும் புத்தகங்கள், தொடர்புகொள்ளும் குடும்பங்கள், நாம் சந்திக்கும் சமுதாயம் இவற்றில் செலவு பண்ணும் சமயத்தை குறித்து மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். 'இதில் நேர்மறையான தவறு இல்லை' என்று திருப்தி கொள்ளாமல் "ஏதேனும் பாவம் செய்வதற்குரிய தருணம் இருக்கிறதா?" என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும்.

சோம்பல் அதிகமாக தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஒன்றும் செய்யாமலிருப்பது நேர்மறையாகத் தீமையல்ல. ஆனால் அது தீய எண்ணங்களுக்கும் வீணான சிந்தனைகளுக்கும் வழிவகுக்கும். அது சாத்தான் களைகளை இருதயத்தில் விதைப்பதற்கு வாசலைத் திறந்து கொடுக்கும். அதற்கு நாம் முக்கியமாக பயப்பட வேண்டும். தாவீது சோம்பலாக எருசலேமின் வீட்டு மாடியில் உலாவினபடியால்தான் பத்சேபாளைப் பார்க்கவும் உரியாவைக் கொல்லவும் தருணம் ஏற்பட்டது.

உலகப்பிரகாரமான பொழுதுபோக்குகள் வேண்டாம் என்பதும் ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. அவற்றை தவறு என்றோ வேதத்துக்குப் புறம்பானவை என்றோ சொல்ல முடியவதில்லை. ஆனால் அவையெல்லாம் ஆத்துமாவுக்கு மிகவும் கெடுதலானவைகள் என்பதை மறுக்க முடியாது. அவை லௌகீகமானதும், உணர்ச்சிவசமானதுமான ஒரு மன நிலையை ஏற்படுத்துகின்றன. விசுவாச வாழ்வுக்கு எதிராக அவை போராடுகின்றன. ஆரோக்கியமற்றதும், இயற்கையல்லாததுமான எழுச்சியைத் தூண்டுகின்றன. அவை மாம்சத்திற்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் ஊழியம் செய்பவை. பரலோகம் நித்தியம் ஆகியவற்றின் பார்வையை மறைத்து காலத்தைக் குறித்த கவலையை அற்றுப்போகச் செய்கிறது. தனி ஜெபம், வேத வாசிப்பு, தேவனோடுள்ள உறவு ஆகியவற்றை அமைதிப்படுத்திவிடுகின்றன.

வாலிபனே இவை எல்லாவற்றையும் இருதயத்தை விட்டு வெளியேற்ற முயற்சி செய், ஏனெனில் இவை ஆத்துமாவுக்குக் கேடுண்டாக்கக் கூடியவை. பிசாசுக்கு சற்றும் இடங்கொடாதே. மக்கள் உன்னைப் பற்றி அளவுக்கு மிஞ்சிய ஜாக்கிரதை காட்டுகிறாய் என்றும் மேற்சொல்லப்பட்டவைகளில் எந்தத் தீமையுமில்லை என்று சொல்லலாம். கூர்மையான ஆயுதங்களை வைத்து விளையாடுவதில் எச்சரிக்கையாயிரு. அழியாத ஆத்துமாவைக் குறித்து தளர்வு காண்பிப்பது மிகவும் ஆபத்தானது. பத்திரமாயிருக்க விரும்புகிறவர்கள் ஆபத்தின் விளிம்பில் நிற்க மாட்டார்கள். வாலிபனுடைய இருதயம் வெடிமருந்து நிரப்பப்பட்டது. ஒரு நெருப்புப்பொறி (சோதனை) அங்கு கொண்டு வரப்பட்டாலும் அது பயங்கரமாக வெடித்து சிதறும்.

## தேவனுடைய கண்ணை ஒருபோதும் மறவாதே

தேவனுடைய கண் எல்லா வீடுகளிலும், எல்லா நிலங்களிலும் அறைகளிலும் எங்குமுள்ளது. கூட்டமாக இருந்தாலும், தனியாயிருந்தாலும் அவருடைய கண் உன் மேலிருக்கிறது. "கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" நீதி.15:3.

எப்போதும் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கிறவர் நம் தேவன். அவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை. தூரத்திலிருந்து கொண்டே உங்கள் நினைவுகளை அறிகிறவர் அவர். அவருக்கு முன் இரவும் பகலைப்போல் வெளிச்சமாயிருக்கும். கெட்ட குமாரனைப் போல நீங்கள் தகப்பன் வீட்டைவிட்டு தூரதேசத்திலிருந்து கொண்டு யாரும் உன் செயலை கவனிக்கவில்லை என்று எண்ணலாம், ஆனால் தேவனுடைய கண்களும் செவிகளும் உனக்கு முன்னாலேயே அங்கு சென்றுவிடும். உங்கள் பெற்றோரை அல்லது எஜமானை ஏமாற்றலாம். அவர்கள் முகத்திற்கு முன்பாக ஒன்றும் முதுகுக்குப் பின்னாக இன்னொன்றும் பேசி ஏமாற்றலாம். ஆனால் தேவனை ஏமாற்றவே முடியாது. அவர் உங்களை முற்றிலும் அறிகிறவர். இந்த நிமிடத்திலே நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் என்பது அவருக்குத் தெரியும். உங்கள் மிக இரகசிய பாவங்களை அவருடைய முகத்தின் வெளிச்சத்தில் வைத்திருக்கிறார். ஜாக்கிரதையா யிராவிட்டால் ஒரு நாள் அவையெல்லாம் உலகத்திற்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டு உங்களை வெட்கப்படுத்தும்.

ஆனால் இதை உணர்பவர்கள் இல்லை! தங்களை யாரோ பார்க்கிறாள்கள் என்ற உணர்வு இருந்தால் தொடர்ந்து செய்யும் எத்தனை பாவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். வெளிச்சத்தில் கொண்டு வரப்படாத எத்தனை சிந்தனைகள் இருதயத்தில் காணப்படுகின்றன. இரகசிய சிந்தனைகள், இரகசியமாகப் பேசப்பட்ட வார்த்தைகள், இரகசிய பாவச் செயல்கள் இவையெல்லாம் ஒரு நாளில் உலகத்திற்கு முன் உங்களை வெட்கப்படுத்துமே. பொல்லாத செயல் செய்யப்படும்போது கேட்கப்படும் ஒரு காலடி சத்தம் அச்செயலைத் தடுத்து நிறுத்துமல்லவா! கதவை தட்டும் ஒரு சத்தத்தால் விரைவில் நிறைவேற்றப்படயிருந்த தீமைகள் வேகமாக நிறுத்தப்பட்டதுண்டு. ஆயினும் எத்தனை தீமைகள் நடைபெறுகின்றன! கதவைப் பூட்டினாலும், விளக்கை அணைத்து விட்டாலும் நம்மைப் பார்க்கிற தேவன்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

இருக்கிறார். அவர் எங்குமிருப்பவர். அவரை வெளியாக்கவோ, அவர் கண்களுக்குத் தப்பவோ முடியாது. "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" எபி.4:13. யோசேப்பை எஜமானி சோதித்தபோது, யாரும் வீட்டில் இல்லாத வேளையிலும் மனித கண்கள் பார்க்காதபோதும் அதரிசனமான தேவன் பார்ப்பதை அவன் அறிந்து, "இப்படியிருக்க நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?" ஆதி.39:9 என்று கூறி தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டான்.

வாலிபரே! நீங்கள் சங்.139-ஐப் படியுங்கள். அதை மனப்பாடமாக்குங்கள். உலகப் பணிகளிலெல்லாம் அதனை ஒரு சோதனையாக வைத்துக் கொள்ளுங்கள். அடிக்கடி, "தேவன் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பது என் நினைவில் இருக்கிறதா?" என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள்.

தேவனுடைய பார்வையில் வாழுங்கள். ஆபிரகாம் இப்படி வாழ்ந்தான். அவன் தேவனுக்கு முன்பாக நடந்தான். ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். தேவனுடைய நித்திய பிரசன்னத்தில் நாம் வாழவேண்டும். **தேவன் அவருக்குப் பிரியமில்லாத எதனையும் நம்மில் காண வேண்டாம். தேவன் கேட்க விரும்பாத எதுவும் நம் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். தேவன் வாசிக்க விரும்பாத எதையும் எழுத வேண்டாம். தேவன் விரும்பாத இடத்திற்குச் செல்ல வேண்டாம்.** 'நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று தேவன் கேட்குமளவிற்கு எந்த சமயத்தையும் வீணாகச் செலவிட வேண்டாம்.

## சர்வ வல்லவரான உங்கள் நண்பர்

### *Your Almighty friend*

Octavius Winslow (1808-1878)

இயேசு சர்வ வல்ல தேவன். அவரது ஜனங்களுக்கு ஒரு சர்வ வல்ல சுமைதாங்கி. நாம் பாரம் சுமக்கிறவர்கள். ஒவ்வொரு விசுவாசியும் தனக்கான ஒரு குறிப்பிட்ட பாரத்தையுடையவன். உன்னுடைய பாரம் என்ன? உன்னில் வாசமாயிருக்கிற பாவ பாரமா? மாம்சத்திலுள்ள ஒரு இயற்கை பெலவீனமா? சரீர அங்கங்களில் குறைபாடா? ஒரு சோதனையா? இழந்து போன ஒரு பொருளா? ஆரோக்கியக் குறைவா? ஆத்தும விசாரமா? மனதளவிலான சோர்பா?

பாரம் சுமந்து அழுந்திப் போன விசுவாசியே வா. எல்லாவற்றையும் சர்வ வல்ல தேவன் மீது வைத்துவிடு. அவர் அவற்றையெல்லாம் சுமக்கக்கூடியவர். உங்களுக்கு இளைப்பாறுதல் தருவார். உங்கள் அழுத்தத்தையும் இயலாமை பெலவீனம் போன்றவற்றையும் அறிவீர்கள். உங்கள் பெலன் போதாமலிருப்பதால் சர்வ வல்ல நண்பரிடம் திரும்புங்கள். அவர் உலக சிருஷ்டிகர். அவர் நித்திய மானவர். அவர் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை.

இயேசு உங்கள் இரட்சகரும், நண்பரும், சகோதரருமாவார். அவர் சர்வ வல்ல தேவன். உங்கள் பெலவீனத்தில் பூரணபெலன் அளிப்பவர். யுத்தம் உங்களுடையதல்ல, அவருடையது. அவர் நமது பாரங்களைச் சுமந்து, பலவீனங்களில் நம்மைத் தாங்கி, தேவைகளையும் சந்திப்பார். அவரது சர்வ வல்லமை மேலானது. அதனால் நம்மைச் சூழ்ந்து பாதுகாப்பார். தெய்வீக இளைப்பாறுதலும் பெலனும் சோர்புற்றோருக்கு அளிப்பார். உங்கள் துக்கம் ஆழமாகவும், மிக பாரமானதுமாயிருக்கலாம். உங்கள் கஷ்டங்களை எந்த மனிதனும் தீர்த்து வைக்க முடியாது.

கடும்புயலால் அலைவுபட்டு ஆறுதலற்றவர்களே, வாருங்கள். ஆவியில் காயமடைந்து இருதயம் நொறுங்கி, உள்ளம் தரைமட்டும் தாழ்ந்தவர்களே அனைவரும் வாருங்கள். கிறிஸ்துவின் சர்வ வல்ல அடைக்கலத்திற்குள் சிறிது காலம் மறைந்திருங்கள். இயேசுவின் பெலன், அன்பு, கிருபை, மனதுருக்கம், கரம் யாவும் பலத்த சத்துவமுடையவை. அவரது பொக்கிஷம் குறையாததும் அளவில்லாததுமாகும். இவ்வகையான அவரது சர்வ வல்லமை உங்களருகிலும் உங்களோடும் இருப்பதால் அது தீயையும் தண்ணீரையும் கூட கடக்கச் செய்யும். உங்களுக்குப் பாதுகாவலளிக்கும் அவரை நம்பலாம். அவர் உங்களுக்காக மனதுருக்கம் கொள்ளும் ஒரு சகோதரர். அவர் உங்கள் நண்பர். அவரது தெய்வீக கரம் உங்களைச் சூழ்ந்து கொள்ளும். உங்களைத் தூக்கிப் பிடிக்கும். அப்போது உங்களது பலவீன உணர்வு அவரைத் தொடுவதால் அவர் மிகுந்த பரிவுடன் உங்களைக் கவனிப்பார்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள் தயவாய் உடனே எல்லா விபரங்களையும் எங்களுக்கு தெரிவியுங்கள். காணிக்கைகள் அனுப்பிய சில நபர்களைகண்டு பிடிக்க முடியாமல் மிகவும் வேதனைப்படுகிறோம். அப்படிப் பட்டவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்த, இவ்விதமான ஒரு அறிவிப்பை அடியேன் வெளியிடுகிறேன்:

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள் உங்கள் தெளிவான விபரங்களை உடனே தெரிவிப்பீர்களானால், கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, உங்கள் பெயர்களை எனது தனிப்பட்ட ஜெப டயரியில் (Personal Prayer Diary) எழுதி உங்களுக்காக பாரத்தோடு ஜெபிப்பேன்.**

இந்த அறிவிப்பை எனது டயரியில் அடியேன் எழுதின சில தினங்களில், அருமையான சகோதரி ஒருவர், மேய் மாதம் 5-ம் தியதி தங்களுடைய திருமண நாளுக்காக (Wedding Day) வங்கி வழியாக காணிக்கை அனுப்பி ஜெபிக்க கேட்டுக் கொண்டார்கள். **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவர்களை வாழ்த்துகிறேன்.** தேவன் அவர்கள் குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

அதுபோல, மணியாடர் அனுப்பும் போது தயவாய் **"வருகையின் தூதன்"** என்ற பெயருக்கே அனுப்புங்கள்.

காசோலைகளை **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்.தற்போதுள்ள விதிகளின்படி (Rules) காசோலைகளில் அடித்தல், திருத்தல் செய்து நீங்கள் சுருக்கமாக கையெழுத்திட்டாலும் காசோலைகளை திரும்ப அனுப்பி விடுவார்கள்.

உங்கள் முகவரிகளில் மொபைல் எண்ணை எழுதுகிறீர்கள், அது போல **பத்திரிகை பதிவு எண்ணையும்** கட்டாயம் எழுதுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10 - 01; 02 - 06

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

***PRAYER is a place of resting in God's presence***

**Contact:**

**VARUKAYIN THOOTHAN**
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
**SOUTH INDIA.**

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

### சிந்தனைக்கு

**நாம்** தேவனோடு நல்ல உறவிலிருப்பது எழுப்புதலையோ, வல்லமையையோ பெறுவதற்காகவோ அல்லது அவரால் பயன்படுத்தப்படுவதற்காகவோ அல்ல. ஏதோ ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அல்ல. **அவரைப்** பெற்றுக் கொள்வதற்காக மட்டுமே.

**சுயநல** காரியங்களைக் கேட்பதை விட்டுவிட்டு **இயேசுவையே** நமது முடிவாக நோக்கும்போது அதோடு அவருக்கு சித்தமான யாவற்றையும் நமக்கு அருளுவார்.

**நமது** தலையாய **கடமை** நாமே எழுப்புதலடைவதாகும்.

அனுமதிக்கப்பட்ட **பாவம்** மனக் கண்களை குருடாக்கி, மனசாட்சியைக் கொன்றுவிடுகிறது. அது சிறியதாயிருந்தாலும் ஆபத்தானதுதான்.

**மனிதனால்** இது கூடாததுதான், ஆனால் **தேவனால்** எல்லாம் கூடும்

**வாலிபரே,** ஆரம்பத்திலேயே **பாவத்**திற்கு எதிர்த்து நில்லுங்கள். அவை மிகச்சிறியவைகளாகவும், முக்கியத்துவ மற்றவைகளாகவும் காணப்படலாம்.

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*